සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

| | |
|---|---|
| තෙවන වාර පරීක්ෂණය 2020 | 11 ශ්‍රේණිය |
| மூன்றாம் தவணைப் பரீட்சை 2020 | தரம் 11 |
| **Third Term Test 2020** | **Grade 11** |

| | |
|---|---|
| දෙමළ සාහිත්‍යය<br>**தமிழ் இலக்கிய நயம்**<br>**Tamil Literature** | පැය තුනයි<br>**மூன்று மணித்தியாலம்**<br>***Three hours*** |

- **பகுதி 1 இல் 1, 2 ஆகிய இரு வினாக்களுக்கும் பகுதி II இலுள்ள 3 ஆம் வினாவுக்கும் பகுதி III இலுள்ள 4, 5, 6, 7 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் (எல்லாமாக ஐந்து வினாக்களுக்கும்) விடை தருக.**

## பகுதி - I

1. ( i ) **தொடக்கம் ( v ) வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.**

( i ) "நீரெல்லாம் அயல் நீங்குமின் நேர்ந்து, யான்
வீரன் உள்ளம் வினவுவல்"

(அ) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ஆ) வீரன் என்று சுட்டப்பெறுபவன் யார்?

( ii ) "கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி "

(அ) இங்கு கனாக் கண்டவர் யார்?
(ஆ) "கைத்தலம் பற்றுதல்" என்ற தொடர்மூலம் சுட்டப்பெறுவது யாது?

( iii ) "வாழி யவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி"

(அ) இங்கு மகவாகவும் தாயாகவும் உருவகிக்கப்படுபவன எவை?
(ஆ) அவ்வாறு உருவகிக்கப்படுவதன் பொருத்தப்பாடு யாது?

( iv ) "குணகடல் செல்வியும் குடமலை ஏகினாள்"

(அ) குணகடல், குடமலை என்ற சொற்களை விளக்குக.
(ஆ) குணகடல் செல்வி யார்?

( v ) "வெட்டிய செடியில் புடைத்து எழும் அரும்பே
மேலுறும் கைகள் பரபரக்கும்"

(அ) அணியை இனங்காண்க.
(ஆ) அணியை விளக்குக.

(4x5 = 20 புள்ளிகள்)

2. **கீழ்க்காணும் பாடலை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனங்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் தனளோ இலளோ பானாள்
பள்ளி யானையின் உயிர்த்தென்
உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே

( i ) திணை, துறை என்பவற்றை கூறுக.

( ii ) தலைவன் தலைவியை நினைத்து வருந்துகின்றமை எவ்வாறு காட்டப்படுகின்றது?

( iii ) இப்பாடல் மூலம் தெளிவுப்படுத்தப்படுவது?

( iv ) இதில் கூறப்பட்டுள்ள அணியை விளக்குக.

( v ) பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.

(அ) தொடலை (உ) உயிர்த்து
(ஆ) தைஇப்
(இ) பூங்கட் பேதை
(ஈ) பானாள் பள்ளி

(5 x5 = 25 புள்ளிகள்)

## பகுதி - II

3. **கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

உச்சி வெய்யில் உடலை வெப்பமேற்றி முதுகை நனைக்கிறது. மேடு, பள்ளம் என்று சைக்கிள் மிதித்ததில் கால்விரல்களில் ஊமைவலி. கையில் கடிதக்கட்டுடன் வியர்வை நெடியோடு, ஊரை வலம் வருகிறேன் நான். காற்றை யாரோ கடத்திக்கொண்டு போன பிரமையில், மரங்கள் சோகம் சுமக்கின்றன. எதிர்ப்பார்ப்பில் சிறகு முளைத்த மனித ஈக்கள் என்னை நோக்கி விரைகின்றன. கனவிலும் நினைவிலும் கடிதக்காரனை ஆராதிப்பதில் ஆசுவதம் காணும் புது யுகமிது.

"எங்களுக்குக் கடிதம் இருக்கியா" பல தடவைகள், கேட்டு செவிமரத்துப்போன கேள்விதான் இது! என்றாலும் தினமும் வந்து தொலைகிறேன் கடிதங்களோடு. பதிலைக் கம்யூட்டர் அறியத்துடிக்கும் அவசரக் குடுக்கைகள் வெளிநாடு போன பரிதாவை நினைத்து உருகி கனவுகள் சுமந்த கண்களால் வினா எழுப்பும் ஒற்றைக் குயில்கள் ஆத்மார்த்த சினேகிதனை வரவேற்கும் உற்சாகத்தோடு நெருக்கமாய் ஒட்டி கொள்வோர், உறவு முறை விளித்து காரியத்தைக் கச்சிதமாய் அறியவிழைவோர்.

இப்படி பல ரகத்தினரைத் தினமும் பார்க்கிறேன். அத்தனை முகங்களிலும் பளிச்சிடும் பாவங்கள் எனக்கு பரிச்சயமானவை.இந்த அந்நியமற்ற யதார்த்தத்தில் ஒரு மழலையைப் போல், மனதைப் பறிக்கொடுக்கிறேன். நிழல் படுத்துறங்கும் குறுகலான செம்மண் பாதை, வெள்ளைப் புறாக்கள் துள்ளிக் குதிக்கும் கலவன் பாடசாலை, விழுது பரப்பி அடர்ந்து செறிந்த ஆலமரம், துல்லியம் துலங்கும் இறை இல்லமும் பள்ளிவாசல், குச்சில் வீடுகள், மாடி வீடுகள், தேநீர்க்கடைகள், குப்பைக் கடதாசிகளை மென்று சுவாரசியமின்றிச் செல்லும் கால் நடைகள், இன்னும் செயற்கை முகம் தரிக்கா கிராமத்து புன்சிரிப்புக்கள்.

( i ) தபாற்காரரின் உடல் அலுப்பு எவற்றின் மூலம் புலப்படுத்தப்படுகிறது?

( ii ) கடிதத்தை எதிர்ப்பார்த்திருப்போரின் ஆவல் எவ்வெவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

( iii ) இங்கு நிலவும் காலநிலை எத்தகையது? அது எவ்வாறு விவரிக்கப்படுகிறது?

(iv) கிராமத்தில் உள்ள மனிதர் தவிர வேறு எவ்வெவ் விடயங்கள் வருணிக்கப்படுகின்றன?

(v) பின்வரும் தொடர்களுள் ஏதேனும் ஒன்றில் நீர்காணும் நயத்தினை விளக்குக.

(அ) எதிர்ப்பார்ப்பில் சிறகு முளைத்த மனித ஈக்கள்.

(ஆ) நிழல் படுத்துறங்கும் குறுகலான செம்மண் பாதை.

(இ) பரிதாவை நினைத்து உருகி, கனவுகள் சுமந்த கண்கள். (5 x5 = 25 புள்ளிகள்)

## பகுதி - III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

4. "உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை" என்பதை வலியுறுத்துவதற்காக உரிமையும் கடமையும் என்ற கட்டுரை அமைந்துள்ளது. விளக்குக.

( 15 புள்ளிகள்)

5. (i) தெளிவென்னும் சிறுகதையில் கடிதத்தை எதிர்பார்த்து இருப்போரின் ஆவல் எவ்வெவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

(ii) கிராமத்தில் உள்ள மனிதர்கள் தவிர வேறு எவ்வெவ் விடயங்கள் வர்ணிக்கப்படுகின்றன? ( 15 புள்ளிகள்)

6. "காலந்தோறும் அகம்" எனும் பாடப்பரப்பில்

( i ) தலைவன் – தலைவியரிடையிலான சிற்றின்பக் காதலும்

( ii ) இறைவன் மீது ஆன்மா கொண்ட பேரின்பக்காதலும் எடுத்துரைக்கப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

7. " வஞ்சியர் காண்டம் " எனும் பாடப்பரப்பில்

( i ) காவற்பெண்டு, கண்ணகியை வணங்காமைக்கான காரணம் எவ்விதம் நாடகத்தில் காட்டப்பட்டுள்ளது?

( ii ) மாதவி பற்றிய கண்ணகியின் மனப்பதிவுகள் 'வஞ்சியர் காண்டம்' நாடகத்தில் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது. விபரிக்குக.

( 15 x 2 = 30 புள்ளிகள்)